பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 07 2024 **THURSDAY** 6 30 **PM**

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அனைத்து தரப்பினருக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் மத்திய பட்ஜெட் அமைவதை உறுதி செய்ய பொருளாதார நிபுணர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆலோசனை நடத்தினார்.

2. மக்களுடன் முதல்வர் திட்டத்தில் இதுவரை எட்டு லட்சத்து 75 ஆயிரம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

3. பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு தடுப்பணை கட்டுவதை தடுக்க தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் கூறியுள்ளார்.

4. பாம்பன் ரயில் பால கட்டுமானப் பணிகள் 90 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

5. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

அனைத்து தரப்பினருக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் மத்திய பட்ஜெட் அமைவதை உறுதி செய்ய பொருளாதார நிபுணர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆலோசனை நடத்தினார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், நித்தி ஆயோக் துணைத் தலைவர் திரு. **Suman Bery,** பிரதமரின் முதன்மைச் செயலாளர் திரு. பி.கே. மிஸ்ரா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 22ஆம் தேதி தொடங்குகிறது.

நடப்பு நிதியாண்டுக்கான முழுமையான பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வரும் 23ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்யவுள்ளார்.

மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக, இடைக்கால பட்ஜெட்டை கடந்த பிப்ரவரி மாதம் அவர் தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

ஆரோக்கியமான மற்றும் சிறிய குடும்பங்கள் மூலமாகவே வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட முடியும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

உலக மக்கள் தொகை தினம் இன்று கடைபிடிக்கப்பட்டதை ஒட்டி, மாநிலங்களின் சுகாதாரத்துறை அமைச்சர்களுடன் காணொலி மூலம் நடைபெற்ற கூட்டத்தில் அவர் பங்கேற்றார்.

மக்கள் தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் மத்திய – மாநில அரசு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்றும் திரு. ஜெ.பி. நட்டா குறிப்பிட்டார்.

உலக மக்கள் தொகை தினத்தை ஒட்டி, நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நாகப்பட்டினத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் 34 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மீன் சார்ந்த தொழில்துறையினரின் கோடைகால சந்திப்பு கூட்டம் மதுரையில் நாளை நடைபெறவுள்ளதாக மத்திய மீன்வள அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மீனவளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் மீனவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கடல்சார் தொழில் நிபுணர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

மீன்வளத்துறையில் உள்ள சவால்கள், வாய்ப்புகள், எதிர்கால நடவடிக்கைகள், பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றம் உள்ளிட்டவை குறித்து இக்கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மத்திய இணையமைச்சர் திரு. எஸ்.பி. சிங் பாஹேல், மாநில அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளதாக மத்திய மீனவளத்துறை கூறியுள்ளது.

>>>>><<<<<

சுதந்திர போராட்ட வீரர் அழகுமுத்து கோனின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன், சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் முதல் சுதந்திரப் போராட்ட தியாகி வீரன் அழகுமுத்து கோன் எனவும், பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிராக வீரத்துடன் போரிட்டவர் என்றும் கூறியுள்ளார்.

ராமேஸ்வரத்தில், வீரன் அழகுமுத்து கோனின் திருவுருவப் படத்திற்கு மத்திய மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை இணையமைச்சர் திரு. எஸ்.பி. சிங் பாஹேல் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவி, சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் அழகுமுத்து கோனை, தேசம் நன்றியுடன் நினைவுகூர்வதாக தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மக்களுடன் முதல்வர் திட்டத்தில் இதுவரை எட்டு லட்சத்து 75 ஆயிரம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

ஊரகப் பகுதிகளுக்கும் இத்திட்டத்தை மாநில அரசு விரிவாக்கம் செய்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இத்திட்டத்தின் கீழ் 13 அரசு துறைகளைச் சார்ந்த கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, தீர்வு காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து தரப்பு மக்களுக்கும் அரசு துறைகளின் சேவைகள் எளிதில் கிடைக்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதி மக்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அனைத்து மாவட்டங்களிலும் இரண்டாயிரத்து 500 சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கரை, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில், வெளியுறவுத்துறை வலுவான முயற்சிகளை உடனடியாக மேற்கொண்டு இலங்கை சிறைகளில் உள்ள மீனவர்களையும், அவர்களது படகுகளையும் மீட்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட ஆந்திர அரசு முயற்சி மேற்கொண்டால், அதனை தடுக்கும் வகையில் தமிழக அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை தொடங்கி வைத்த பின் பேசிய அவர், சென்னையில் புதிதாக உருவாக்கப்படும் ஏழு ஏரிகள் மூலம் குடிநீர் பற்றாக்குறையை தீர்க்க முடியும் என்று தெரிவித்தார்.

ஏரிகளிலிருந்து களிமண் மற்றும் வண்டல் மண் எடுக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் மூலம் அதிக நீரை தேக்க முடிவும் என்றும் அமைச்சர் திரு. துரைமுருகன் கூறினார்.

>>>>><<<<<

பாம்பன் ரயில் பால கட்டுமானப் பணிகள் 90 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக ரயில்வே வாரிய உள்கட்டமைப்பு பிரிவு உறுப்பினர் திரு. அனில்குமார் கண்டேல்வால் தெரிவித்துள்ளார்.

550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாம்பன் - ராமேஸ்வரம் இடையே அமைக்கப்பட்டு வரும் புதியபாலப் பணிகளை இன்று அவர் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடுத்த இரண்டு மாதத்தில் அந்த பாலத்தில் சோதனை ஓட்டம் நடைபெறும் என்றார்.

ராமேஸ்வரம் முதல் தனுஷ்கோடி வரை ரயில் வழித்தடம் அமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கும் என்றும் திரு. அனில்குமார் கண்டேல்வால் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் பூரண மதுவிலக்கை உடனடியாக அமல்படுத்த சாத்தியமில்லை என்று மாநில மதுவிலக்கு மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி கூறியுள்ளார்.

ஈரோடு அருகே வெள்ளோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதுவிலக்கை அமல்படுத்துவதில் நடைமுறை சிக்கல்கள் உள்ளதாக தெரிவித்தார்.

மதுப்பழக்கம் உடையவர்களை மீட்டு, அவர்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று திரு. முத்துசாமி கூறினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் அரசு பணியில் உள்ள மருத்துவர்கள் பட்ட மேற்படிப்பு படிப்பதற்கான சேவை ஒதுக்கீட்டு இடங்களை, சில பாடப்பிரிவுகளில் மாநில அரசு

ரத்து செய்துள்ளது கண்டிக்கத்தக்கது என அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இந்த நடவடிக்கை, அரசு மருத்துவர்களின் கல்வி வாய்ப்புகளை பறிக்கும் செயல் என தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அரசாணையை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் காவல்துறையின் செயல்பாடுகளில் திமுக தலையிடுவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூலிப்படையினர் மற்றும் சமூக விரோதிகளை ஒடுக்க முறையாக நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ளவில்லை என்று கூறினார்.

கருத்து சுதந்திரத்தை பறிக்கும் வகையில் திமுக அரசு செயல்படுவதாக திரு. அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட காவல்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்டம் ஒழுங்கு சீர்கேட்டிற்கு காவலர்கள் பற்றாக்குறை காரணம் என்று தெரிவித்தார்.

தற்போது, மாநிலத்தில் ஒரு லட்சத்து 10 ஆயிரம் காவலர்கள் உள்ளதாகவும், 40 ஆயிரம் பணியிடங்கள் நிரப்பபட வேண்டும் என்றும் திரு. ராமதாசு கூறினார்.

>>>>><<<<<

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், நாளை ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 49 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

திருவள்ளூர் மாவட்டம், கே.ஜி. கண்டிகை ஊராட்சியில் அரசின் நலத்திட்ட உதவிகளை மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. காந்தி, பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>>><<<<<

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து காலிங்கராயன் வாய்க்கால் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில் நாளை முதல் 120 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படும் என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

>>>>><<<<<

வார இறுதி நாட்களை ஒட்டி, சென்னையிலிருந்து நாளை கூடுதலாக 945 பேருந்துகள் பல்வேறு பகுதிகளுக்கு இயக்கப்படும் என அரசு போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்தி

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நெல்லை அணி இன்று சேலம் அணியை எதிர்கொள்கிறது.

சேலத்தில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி 7.15க்கு தொடங்குகிறது.

>>>>>END<<<<<